**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.**

**அ.வ.எண்.75/2022**

**இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 3ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 3ம் நாள் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். ஞானசேகரன்** | **வயது** |
| **த.பெ(அ) க.பெ** | **மதம்** |
| **கிராமம்** | **வட்டம்** |

**<u>வா.சா.3 முதல் விசாரணை</u>**

**03.07.2025**

இந்த வழக்கில் நான் 3ம் நபர் ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1. வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன்**

என்றால் 1ம் வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் வாதிகளின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தது என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லவில்லை என்றால் சரிதான் அதில் உள்ள விவரம் நேரடியாக தெரியாது. தாவா சொத்து குறித்து எந்த வருவாய் ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**2**. தாவா சொத்துகுரிய பட்டா, சிட்டா மற்றும் அ பதிவேடு எந்தெந்த கால கட்டத்தில் யார் யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. யார் யாருக்கு இடையில் என்னென்ன பரிகாரம் கோரி முந்தைய வழக்குகள் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. யார் தற்போது தாவா சொத்தை அனுபவித்து தீர்வை கட்டி வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிகள் மற்றும் நான் மொறப்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஒரே ஊர்காரர் என்பதால் அவருக்கு பவ்வியபட்டு சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.